நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

# STC No. 650/2017

**2024**-ம் ஆண்டு **பிப்ரவரி மாதம் 16 -ம்** நாள் புகார்தாரர் தரப்பில் சாட்சி **பு..சா.1** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரசேகரன் | வயது | 55/2023 |
| தகப்பனார் பெயர் | சேப்பபிள்ளை | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | கீவளூர் | தாலுக்கா | |

**முதல் விசாரணை** :

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். வழக்கு விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதுதான். எதிரி மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதிரி என் பெயருக்கு **ரூ.60,000/-ற்கு** கொடுத்த 14**.09.2014** ம் தேதிய காசோலை அசல் தாக்கல் செய்கிறேன். ( காசோலை அசல் **பு.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**). 17.-09.2014 ம் தேதியிட்ட வங்கியால் ஏற்பாட்டுத்தொகைக்கு அதிகமாக உள்ளது என காரணம் காட்டப்பட்டு திருப்பப்பட்ட வங்கி குறிப்பாணை தாக்கல் செய்கிறேன். ( **வங்கி குறிப்பாணை பு.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இது சம்பந்தமாக **10.10.2016** ம் தேதியன்று தொகை கேட்டு என் வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினேன். அதன் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். ( **அறிவிப்பு நகல் பு.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எதிரி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய அஞ்சல் உறை தாக்கல் செய்கிறேன். ( **அஞ்சல் உறை பு.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எதிரி அவரது வங்கி கணக்கில் பணம் இல்லை என்று தெரிந்துக்கொண்டே மோசடியாக எனக்கு காசோலை கொடுத்து ஏமாற்றியதால் அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புகார்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

**எதிரி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/- எல். ரகுபதிராஜா,

நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.